Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 30 திங்கட்கிழமை (16.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:320

★ வடக்கு - கிழக்கு பிரிப்புப் பற்றிய உயர் நீதிமன்றத் தீர்ப்பு

★ சு.கவுடனான இணக்கப்பாடு குறித்து ஐ.தே.க. தீர்மானம்

# முக்கிய அரசியல் முடிவுகள் இன்று தென்னிலங்கையில்!

## அகாஷி, போவர், பௌச்சர் விஜயங்களும் இவ்வாரத்தில்

கொழும்பு, ஒக்ரோபர்16

**தேசிய இனப்பிரச்சினையில் சிக்குண்டிருக்கும் இலங்கையின் தலைநகரில் இன்று முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் முடிவுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.**

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிக்குமாறு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீது இன்று உயர் நீதிமன்றம் தனது முக்கிய தீர்ப்பை வழங்கவிருக்கின்றது.

அதேவேளை, ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பொது இணக்கப்பாடு ஒன்றின் கீழ் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சி ஒன்றுபட்டு செயற்படுவது குறித்தும், இன்றே முடிவு செய்யவிருக்கின்றது.

(06ஆம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கான இந்தியத் தூதுவராகப் பணியாற்றிய திருமதி நிருபமா ராவ் தமது பதவிக் காலம் முடிவடைந்து சீனாவுக்கான தூதராக பதவியேற்கவுள்ளார். ஜனாதிபதி மஹிந்தராஜ பக்ஷவைச் சந்தித்து நேற்றுப் பிரியாவிடை பெற்றார்.

## முகமாலை, நாகர்கோவில் முன்னரங்கில் இருதரப்பும் மாறி மாறி ஆட்லறி தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக்.16

முகமாலை நாகர்கோயில் முன்னரங்கப் பகுதியில் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் இடையிடையே மோதல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இரு தரப்பினரும் மாறி மாறி ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

படையினரின் முன்னரங்குகளிலிருந்து புலிகளின் பகுதிகள் நோக்கி பல்குழல் பீரங்கிகள் மற்றும் ஆட்லறி ஷெல்கள் ஏவப்படும் சத்தம் நேற்று முன்தினம் இரவு முழுவதும் கேட்டவண்ணம் இருந்தது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. 39ஆம் கொலனியில் புலிகள்-அதிரடிப்படை சமர்

மட்டக்களப்பு எல்லைக் கிராமமான 39 ஆம் கொலனியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஊடுருவல் முயற்சி ஒன்றைத் தாங்கள் முறியடித்திருக்கின்றனர் என விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

கடுமையான ஷெல் மற்றும் மோட்டார் தாக்குதலுடன் அதிரடிப் படையினர் ஊடுருவ முயற்சித்த போது, விடுதலைப் புலிகளுக்கும், அவர்களுக்கும் இடையே கடுமையான சண்டை வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள்

(06ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுகளில் இந்த முறை பாலா பங்குபற்றமாட்டார்

லண்டன், ஒக்.16

சுவிற்ஸர்லாந்தில் எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறவிருக்கும் அமைதிப் பேச்சுகளில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பங்குபற்றமாட்டார். உடற்சுகவீனமே அதற்குக் காரணம் என அவர் தெரிவித்தார்.

''சர்வதேச சமூகத்துக்கு அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதாகக் காட்டிக்கொண்டு தனது இராணுவ நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டத்தை அரசு மறைமுகமாக மேற்கொள்கின்றது. இதனால் வடக்கு - கிழக்கில் நிலைமை விசனம் தருவதாகவும், சஞ்சலத்தையும் ஏற்படுத்துவதாகவும் மாறியுள்ளது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கடலில் சண்டை!

மன்னார், ஒக்.16

மன்னார் கடற்பரப்பில் நேற்றுக் காலை கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே சமர் ஒன்று இடம் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மன்னார், அரிச்சல் என்ற பகுதியில் நடந்த இந்தச் சமரில் கடற்படையினர் தரப்பில் மூவர் காயமடைந்தனர் என்று தேசிய பாதுகாப்புத் தொடர்பான தகவல் மையம் தெரிவித்தது.

புலிகளின் படகு ஒன்றை கடற்படையினர் மூழ்கடித்தனர் என்றும் - அதில் இருந்த 4 புலிகள் உயிரிழந்திருக்கலாம்

(06ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப் பொருள்களுடன் மற்றொரு கப்பல் காங்கேசனுக்கு!

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்.குடாநாட்டுக்கான அத்தியாவசியப் பொருள்களுடன் 'கின்ங்டம்' என்ற கப்பல் இன்று காங்கேசன்துறையை வந்தடையவுள்ளது என்று யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கப்பலில் 400 மெற்றிக் தொன் கோதுமைமா, 225 மெற்றிக்தொன் சீனி, 50 மெற்றிக் தொன் பால்மா, 24 மெற்றிக் தொன் செத்தல் மிளகாய், 44 மெற்றிக் தொன் மல்லி, 29 மெற்றிக்தொன் உள்ளி என்பனவற்றுடன் பற்பசை, சவர்க்காரம் போன்ற நானாவிதப் பொருள்கள் எடுத்து வரப்படும் என்றும் -

நாளை செவ்வாய்க்கிழமை மாலை இந்தக் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி ஆரம்பமாகும் என்றும் - யாழ். அரச அதிபர் கே.கணேஷ் உதயனுக்குத் தெரிவித்தார். (06ஆம் பக்கம் பார்க்க)

## கற்பிட்டிக்கடலில் விடுதலைப் புலிகளின் படகு எதுவும் தாக்குதல்களுக்கு உள்ளாகவில்லை

### மறுக்கிறார் இளந்திரையன்; உண்மையென்கிறார் பிரசாத் சமரசிங்க

''இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளமை முற்றிலும் தவறான தகவலாகும். கற்பிட்டிக் கடற்பரப்பில் எமது படகுகள் எதுவும் தாக்கப்படவில்லை.''

- இவ்வாறு புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்தார் என இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நேற்று இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த பேச்சாளர் டி.கே.பி.தஸநாயக்க, பெருந்தொகையான ஆயுதங்களுடன் சென்ற புலிகளின் படகைக் கடற்படையினர் தாக்கிஅழித்தனர் எனத் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் முகமாகவே புலிகளின் பேச்சாளர் இத்தகவலைத் தந்தார் என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டிக் கடற்பரப்பில் இவ்வாறான தொரு சம்பவம் நடைபெற்றது என எமக்கு எவ்வித தகவல்களும் கிட்டவில்லை. இவ்வாறான பொய்யான தகவல்களைப் பரப்பி நிலைமையைக் குழப்புவதற்கு

(06ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைகள்

வடமராட்சி, தம்பசிட்டி - பண்டாரி அம்மன் கோவிலடியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இனந்தெரியாதவர்களால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதேயிடத்தைச் சேர்ந்த இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தரான சரவணமுத்த பஞ்சவர்ணம் (வயது-58) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் வீட்டிலிருந்து சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் இனந்தெரியாதவர்கள் இவரை சுட்டு விட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை நீதிவான் கே. அரியநாயகம் மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மேலும் சில பாடசாலைகளின் உயர்தரப் பரீட்சை முடிவுகள்

கடந்த 6ஆம் திகதி வெளியான ஜி.சீ.ஈ உயர் தரப் பரீட்சையின் தமது மாணவர்களின் முன்னணிப் பெறுபேறுகளை மேலும் சில பாடசாலைகளின் அதிபர்கள் உதயனுக்கு அனுப்பி வைத்துள்ளனர்

அவற்றின் விவரம் வருமாறு:-

**கோண்டாவில் இந்து ம.வி**

சி.சஞ்சீவன்-2ஏசி, இ.ஜெகரூபி-ஏ2பி, ச.கஜீதா-ஏபிசி, தே.சுகிர்தா-ஏபிசி, ஜீ.துஸ்யந்தி-ஏ2சி, சி.ஆதவன்-2பிசி, சி.ரணீசன்-2பிசி, இ.தர்சினி-2பிசி, ம.ஜீவகாந்-பி2சி, கு.டெய்சிகா-பி2சி, செ.சுரேந்திரன்-பி2சி, பி.பியூலா- பி2சி, யோ.றஜீதா-பிசிஎஸ், பா.சுஜித்தா-பிசிஎஸ், செ.அனித்தா -பிசிஎஸ், த.ரணிஷா-பிசிஎஸ்

**தாளையடி உடுத்துறை ம.வி**

**கலை**

யோ.வின்சிகா-2ஏபி, ஜெ.ஜெயவதி-ஏ2பி, ஆ.அனுசியா-ஏபிசி, ச.சசிகரன்-ஏ2சி, ந.சிவா-ஏ2சி.

**வணிகம்**

கு.ஞானசீலன்-2ஏபி, த.கவிதாஸ்-2பி சி.

**நெல்லியடி ம.ம.வித்தியாலயம்**

**விஞ்ஞானம்**

பா.உமாஜினி-ஏ2பி, சு.ஜனாதனா-ஏ பிசி, வி.கலைச்செல்வி-ஏபிசி, ச.உமா-2 பிசி, இ.வாசினி-2பிசி, இ.கீர்த்தனா -2பிசி,

**கணிதம்**

இ.சௌமியா-ஏபிசி, பொ.நிஷாந்தி-பி2சி, த.விஜிதா-பிசிஎஸ், வி.காண்டீபன்-பி2சி, க.பிரசாந்-3சி.

**கலை**

க.சயந்தன்-3ஏ, கி.கோபிகா-ஏ2பி, சு.நிருத்திகன்-2ஏபி, ம.நர்மதா-2ஏபி, க.சஞ்சீவன்-ஏபிசி, வி.துவாரகன்-2ஏசி.

**வர்த்தகம்**

பா.புஷ்பாகரன்-2ஏபி, ச.சுகர்ணன்-3பி, க.சிந்துஜா-ஏபிசி.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

**உயிரியல்**

யோ.அஜித்தா-ஏ2எஸ், சே.விந்துஜா - பிசிஎஸ்.

**கணிதம்**

பொ.ரேவதி-பிசிஎஸ்,

**வர்த்தகம்**

சோ.கார்த்திகா-2பிசி, வி.மயூரா-2பிசி, செ.செல்வமலர்-ஏ2சி.

**கலை**

தெ.தேனிதா-2ஏபி, ரா.பிறேமினி-2ஏசி, க.சிந்துஜா-2ஏசி, செ.திருமலர்-ஏபிசி, ச.கிருஷியா-ஏபிசி, த.பவித்திரா-ஏ2சி, சி.டெல்சியா-ஏ2சி, ம.மேரிவிஜிதா-ஏ2சி, த.கோபிகா-ஏ2சி, ர.தர்மினி-ஏ2சி, ந.வினித்தா-ஏபிஎஸ், க.கிருஷாந்தி-3பி, நா.கோமதி-3பி, செ.மனோராதா -2பிசி, ல.நிவேதிகா -2பிசி, மு.அபிராமி-2பிசி, அ.மேரிடிலுக்ஷா-2பிசி, மு.விஜயந்தி-2பிசி, க.தர்ஷிகா-2பிசி, வே.யோகமலர்-2பிசி,

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

**உயிரியல்**

எம்.கோபிஷான்-3ஏ, ஜி.பிரதீபன்-3ஏ, எஸ்.சாரங்கன்-3ஏ, எஸ்.பிரசாந்த்-3 ஏ, வி.இந்துஜன்-2ஏபி, வி.சிவதர்சன்-2ஏபி, ரி.ஜெயதர்சன்-2ஏபி.

**கணிதம்**

ஆர்.ராகுலன்-2ஏபி, பி.இராகவன்-2ஏபி.

**வர்த்தகம்**

வி.ஐங்கரன்-3ஏ, ஆர்.நீலவாணன்-3ஏ, எ.கௌதமன்-2ஏபி, ஏ.ஆதித்தன்-2ஏபி, எஸ்.சிவசொரூபன்-ஏ2பி.

**கலை**

ஆர்.ராகீஷன்-3ஏ, ஆர்.பிரணவன்-3ஏ, ஆர்.நிரோஜன்-2ஏபி, ஜே.திருவரங்கன்-2ஏபி, எஸ்.ஜெயகணேஷ்-2ஏபி.

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

**கலை**

செ.சிவானதி-2ஏபி, த.சங்கீதா-2ஏபி, த.தயேந்திரன்-2ஏபி, யோ.சசிகரன்-ஏ2பி, த.திருநிலைநாயகி- ஏ2பி, இ.சிவநந்தினி-ஏபிசி, ந.ஜனனி-ஏபிசி, த.பிரவீனா-2ஏஎஸ், பு.சுபாசினி-ஏபிசி, ப.விஜிதரன்-2பிசி, க.சவுந்தினி- 2பிசி, செ.கோபிகா-ஏ2சி, தா.றுக்சி அன்சியா- 2ஏஎஸ், யோ.பிரசாந்தினி- ஏ2சி, ஸ்ரீ.சபேசன்- ஏ2சி, ச.லதாஜினி- ஏ2சி, க.பிரமிளா-2பிசி, ப.சிந்துஜா-2பிசி, நா.மேனுசா-ஏ2சி, ந.சிந்துஜா-ஏசிஎஸ்.

(203-173-79)


## ஹாட்லிக் கல்லூரி
## தரம் - 6 அனுமதி - 2007

ஹாட்லிக் கல்லூரியில் 2007 இல் தரம் - 6 அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை 18.10.2006 - 25.10.2006 வரையில் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 01.11.2006

(சி-51160) -அதிபர்.


## கண்ணீர் அஞ்சலி



கந்தையா தர்மகுலசிங்கம்
(பிரதம பாதுகாப்பு அதிகாரி இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்)
அவர்களின் பாசமிகு அன்னை

திருமதி
**கந்தையா கனகம்மா**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆறாத் துயரில் இருக்கும் அவருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களும் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றனர்.

கோல்டன் ஈகிள்
மேற்பார்வையாளர்கள் மற்றும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.

(சி-51162)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பனும் சக உத்தியோகத்தருமாகிய
யோகேஸ்வரன் அவர்களின் அன்புத் தாய்
**சுந்தரம் சிவயோகேஸ்வரி**

அவர்கள் 15.10.2006 அன்று காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரர் சுந்தரம் சிவயோகேஸ்வரிக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

முகாமையாளரும் உத்தியோகத்தர்களும்
தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை.

(54414)

## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரம் சிவயோகேஸ்வரி



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம் சிவயோகேஸ்வரி நேற்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் சுந்தரத்தின் (இளைப்பாறிய அதிபர்- அரசினர் த.க. பாடசாலை, அனலைதீவு) அன்பு மனைவியும் சிவபாதசுந்தரம், இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரன் (ஜேர்மனி), விக்கினேஸ்வரி, சுந்தரகுமாரி, யோகேஸ்வரன் (தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை), மங்களேஸ்வரன் (ஜேர்மனி), ரமணி (இந்தியா), கோணேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் குலமணி, செல்வரத்தினம், சர்வானந்தம், தர்சியா, வசந்தினி, சிவானந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**17/2, தாமரை வீதி,**
**ஆறுகால்மடம்,**
**ஆனைக்கோட்டை.**

தகவல்:
**சுந்தரம் (கணவர்)**

(54412)

## திருத்தம்

நேற்றைய உதயனின் 10 ஆம் பக்கத்தில் வெளியான மரண அறிவித்தலில் **சதாசிவம் அனந்தசுரேஸ்** என்பதற்குப் பதிலாக **சதாசிவம் அனந்தசிவம்** என்று தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. இதனை திருத்தி வாசிக்கவும்.


## THE ROYAL COLLEGE OF JAFFNA

சிறந்த பாடசாலைகளில் ஆண்டு 1 இற்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கு வார நாள்களில் காலை 9 - 11 வரை ஆங்கில மூல வகுப்புகள். தமிழ் மட்டும் தமிழ் மூலம்.

426 (302), கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய குரு
சதாசிவக் குருக்கள்
சிவஸ்ரீ யோகீஸ்வர
குருக்கள்
(ராஜாதி குருக்கள்)
அவர்களின் பாசமிகு
அன்பு மகள்

**யோகீஸ்வரி**

அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவு தாங்கமுடியாத அவரின் குடும்பத்தினருக்கு திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் கோயில் அடியார்கள் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அடியார்கள்
பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர்
கோயில், திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா கனகம்மா



வண்ணார்பண்ணை, 221/1 கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொரண்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா கனகம்மா 13.10.2006 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை கந்தையா (VK)யின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தையலம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சுப்பிரமணியம், சுந்தரம்மா, வள்ளியம்மா மற்றும் மார்க்கண்டு (கனடா) ஆகியோரின் இனிய சகோதரியும், கல்யாணி (கொழும்பு), தர்மகுலசிங்கம் (பிரதம பாதுகாப்பு அதிகாரி, இலங்கை, சிமெந்து கூட்டுத்தாபனம்), புவிராஜசிங்கம் (கனடா), இராஜகுலசிங்கம் (கனடா), விஜயகுல சிங்கம்(கனடா), செல்வஜோதி (கனடா) புஸ்பஜோதி (கனடா), Dr.பஞ்சகுலசிங்கம் (நோர்வே), பிரேமஜோதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற ஜீவரட்ணம், நீலயோஜினி (வேம்படி மகளிர் உயர் கல்லூரி), லீலா (கனடா), மணிமேகலை (கனடா), கீதாஞ் சலி (கனடா), Major ரவீந்திரன் (கனடா), சிவந்தன் (கனடா), மொனிக்கா (நோர்வே), இளங்கோ (கனடா) ஆகியோரின் மாமியும் பாமினி, பமிதா, நிரஞ்சன், ஸ்ரீபியா, காஜீத்திரி, தர்சினி, ஜீவித்தா, யாதவன், யாழினி, வைஸ்ணவி, பிரணவன், ராகவி, ராஜ்கண்ணா, அஸ்வினி, ரொஷான், ரொகான், சில்வியா, சிவகாமி, அலெக்ஸ்சாண்டர் சித்தார்த்தர், விக்டோரியா, மேகலா, அகிலன், ஆதிரை, குகன், அரண்ராஜ் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் மகிஷாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் 21.10.2006 சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கனடா முகவரி:*
**81, BROOKMILL BLUD**
**#54,**
**SCARBOROUGH,**
**ONG MIW 235,**
**CANADA.**
**416 4992665**

*தகவல்:*
**க.தர்மகுலசிங்கம் (மகன்)**
**த.நீலயோஜினி (மருமகள்)**
**21, பொன்னப்பா லேன்,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 3141**

(சி-51163)

### கார்த்திகேசு பத்தர் இராசதுரை

(ரேடியோ மெக்கானிக், சவுண்ட் இஞ்சினியர்)



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பத்தர் இராசதுரை 13.10.2006 வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் நித்தியலட்சுமியின் அன்புக் கணவரும் சத்தியநாதன் (ஜேர்மனி) ,சந்திரமோகன் (திருகோணமலை), சத்தியசந்திரன் (இந்தியா), சந்திரகலா (கொழும்பு), சந்திரவதனி (கனடா), விஜியச்சந்திரன் (நீர்வேலி), ரவிச்சந்திரன் (இந்தியா), சந்திரகாந்தி (யாழ்ப்பாணம்), சத்தியசாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலா (ஜேர்மனி), பாலராணி (திருகோணமலை), இராஜநந்தினி (இந்தியா), புலேந்திரன் (கொழும்பு), ஜெயரட்ணம் (கனடா), மஞ்சுளா, காலஞ்சென்ற ஜீவா மற்றும் முத்துக்குமார், கௌசலா ஆகியோரின் பாசமிகு மாமனும் சத்தியராஜ் -யாழினி, சத்தியப்பிரபா - அ( நசெல்வி, சத்தியசங்கர், சங்கீதன், சாகித்யா, கிசாந், சத்தியநந்தன், பிரகாஷ், விஷ்ணுதாஸ், உமாசந்தர், சாரங்கன், ஜனனி, காயத்ரி, கஜேந்திரன், விஜிதன், அபிராமி, கார்த்திகா, பிரசாந், கிருசாந்தி, ஸிவானி, தர்சிகன், பிரதிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் சிவயோகத்தின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.10.2006 வெள்ளிக்கிழமை இந்தியாவிலுள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார்,.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**110, பத்திரகாளி கோயில் வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

*தகவல்:*
**பா.முத்துக்குமார்**
**(மருமகன் AMT கொம்பனி),**
**சாந்தி (மகள்)**

(54411)

*செல்வி*

### பாற்பதியம்மை திக்கம் செல்லையாபிள்ளை (றாயர்)

(பொலிகண்டி கந்தவன ஆதீன கர்த்தரும், இளைப்பாறிய உபதபாலதிபரும்)

கந்தவனம், பொலிகண்டியைச் சேர்ந்த செல்வி பாற்பதியம்மை செல்லையாபிள்ளை (றாயர்) 12.10.2006 வியாழக்கிழமை அன்று குகனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சைவப்பெரியார் திக்கம் சி.செல்லையாபிள்ளை - ராஜமுத்து தம்பதியரின் செல்வப்புதல்வியும் காலஞ்சென்ற நாகபூஷணி குமாரசுவாமி, பொன்னம்மை பத்மநாதன் (இளைப்பாறிய சங்கீத விரிவுரையாளர்- ஆசிரிய பயிற்சிக் கலாசாலை), காலஞ்சென்ற யோகீந்திரன் (கந்தவன ஆதீனகர்த்தர், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன உத்தியோகத்தர்), செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை (இளைப்பாறிய சங்கீத ஆசிரியை மருதனார்மடம், இராமநாதன் கல்லூரி), சிவயோகநாயகி இராமநாதன் (இளைப்பாறிய கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர், பகுதிநேர பிரெஞ்சு விரிவுரையாளர் -யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.10.2006 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, திருவுடல் கந்தவனம் ஊரணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அக்கினியுடன் சங்கமமாக்கப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"கந்தவனம்"**
**பொலிகண்டி.**

*தகவல்:*
**செல்வி யோகாம்பிகை**
**செல்லையாபிள்ளை**
**(சகோதரி)**

(54408)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை பெய்ய ஆரம்பித்ததை அடுத்து விவசாயிகள் நெல் விதைப்பில் மும்முரம்

கல்வியங்காடு, ஒக்.16

யாழ்.குடாநாட்டில் கடந்த சிலநாள்களாகப் பெய்த கடும் மழையை அடுத்து வலிகாமம் பிரதேச விவசாயிகள் நெல்விதைப்பில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடும் வரட்சி நிலவியதன் காரணமாக வயல் நிலங்கள் வரண்டு தரிசு நிலங்களாகக் காணப்பட்டன. இதனால் விவசாயிகள் பெரும் கவலையடைந்திருந்தனர்.

தற்போது பெய்த மழையை அடுத்தும் குடாநாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளை அடுத்தும் விவசாயிகள் நெற்செய்கையில் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதேவேளை- கோப்பாய், புத்தூர், நீர்வேலி, உரும்பிராய், ஊரெழு ஆகிய பிரதேசங்களில் மரவள்ளி, சிறுதானியவகை போன்றவற்றைப் பயிரிடுவதிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில், தற்போதைய சூழ்நிலையில் விதையினங்கள், உரம், கிருமிநாசினி போன்றவற்றிற்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இவற்றைப் பெற்றுத்தர உரியவர்கள் முன்வரவேண்டுமெனவும் விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-79)

# கடலில் இடப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் இன்னும் முழுமையாக மீட்கப்படவில்லை

## கடற்றொழிலாளர் கவலை தெரிவிப்பு

நல்லூர், ஒக்.16

கடந்த ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதிக்கு முன்னர் கடலில் இடப்பட்ட வலைகள் மற்றும் மீன்பிடித் தொழில்உபகரணங்கள் என்பன இதுவரை முழுமையாக மீள எடுக்கப்படவில்லை என்று மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மீனவர்களால் கடலில் இடப்பட்ட வலைகளையும் ஏனைய உபகரணங்களையும் மீண்டும் எடுப்பதற்கு பாதுகாப்புப் பிரிவினர் அனுமதி வழங்கியதாகக் கூறப்பட்டது.

எனினும், படைமுகாம்களுக்கு அண்டிய பகுதிகளில் உள்ள கரையோரங்களில் போடப்பட்டிருந்த மீன்பிடி உபரணங்கள் மட்டுமே எடுக்கப்பட்டுள்ளதாகவும் -

தூர இடங்களில் போடப்பட்டவற்றை எடுப்பதற்கான அனுமதி கிடைக்கவில்லை என்றும் - மீனவர்கள் தெரிவித்தனர். (203 -111)

# இம்முறை வித்தியாசமான முறையில் சமாதானப் பேச்சுக்கள் அமையும்

## பாதுகாப்புப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல

கொழும்பு, ஒக்.15

முன்னர் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களைப் போல் அல்லாது வித்தியாசமான நிலைப்பாட்டில் இம்முறை சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறும் என்று பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் மாத இறுதியில் இடம்பெறும் என்றும் - அவர் தெரிவித்தார்.

பேச்சு நடைபெறும் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்களுக்குப் பதில் தாக்குதல் மேற்கொள்ள அரசுக்கு முழு அதிகாரம் உண்டு என்றும் அவர் வலியுறுத்தினார்.

தேசிய பாதுகாப்பு எந்தக் காரணத்தைக் கொண்டும் தாரைவார்க்கப்படமாட்டாது என்றும் அமைச்சர் மேலும் வலியுறுத்தினார். (203)

# தாய்மார், சிறுவருக்கு பல்வேறு உதவிகள்

வடமராட்சி, ஒக்.16

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் தங்கியுள்ள பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணித்தாய்மார், சிறுவர்கள் ஆகியோருக்கு மந்திகை சத்திய சாயி சேவா சங்கத்தினர் தேவையான பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளனர். சேவாசங்கத்தின் தலைவர் திருமதி புனிதம் தங்கராசா தலைமையிலான குழுவினர் இந்த உதவிகளை வழங்கியுள்ளனர். (203 - 173)

# தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஒக்.16

யாழ்.மாவட்ட மருத்துவமனைகளில் ஆய்வுகூட ஏவலாளி தரம் II இல் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் சுகாதார திணைக்கள மருத்துவமனைகளில் கடமையாற்றும் ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்த சுகாதார மற்றும் சாதாரண தொழிலாளர்களாகக் கடமையாற்றுவோரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படும்.

இப்பதவிக்கு விண்ணப்பம் செய்வோர் ஆய்வுகூடத்தின் உபகரணங்களை நன்கு கையாளவும், ஆய்வுகூடத்தில் பாவிக்கப்படும் இரசாயனப் பொருள்கள் பற்றியும், இரசாயனப் பொருள்கள் கையாளும் விதம் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (203)

**அதிபர் சேவை தரம் 2:II பதவிகள்**

# பரீட்சையில் சித்தியானவர்களுக்கு உயர்புள்ளி அடிப்படையில் நேர்முகம்

அச்சுவேலி, ஒக்.16

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II பதவிக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகி உள்ளன.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் உயர் புள்ளி அடிப்படையில் நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.இதேவேளையில் பதில் அதிபர்களாக இருப்பவர்கள் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப்பரீட்சைக்குச் செல்லுமிடத்து பதில்கடமை ஆற்றியதற்கு புள்ளி வழங்கப்படும். அத்துடன் நேர்முகப்பரீட்சை, எழுத்துப்பரீட்சை இரண்டையும் அடிப்படையாகவைத்து நியமனம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II பதவிப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய ஆசிரியர்களுக்கான பெறுபேறுகள் தனித்தனியாக பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டவுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது. (ப-11)

# நெல்லியடி பொதுச் சந்தையில் இடநெருக்கடியால் சிரமம்

பருத்தித்துறை,ஒக்.16

நெல்லியடி பொதுச்சந்தையில் இடநெருக்கடி காரணமாக பொருள்களைக் கொள்வனவு செய்வதில் பெரும் சிரமங்களைப் பாவனையாளர்கள் எதிர்நோக்குகின்றனர். புதிய விற்பனையாளர்கள் தாம் நினைத்த இடங்களில் பொருள்களை விற்பனை செய்வதால் சந்தைக் கட்டமைப்பைப் பேண முடியாதுள்ளதாகவும் கூறப்பட்டது. இதேவேளை- சந்தையில் போடப்படும் கழிவுப்பொருள்கள் தினமும் அகற்றப்படுவதில்லை. இதனால் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்குவதாக பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக வெள்ளம் தேங்கியுள்ளதால் பாவனையாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதா கக் கூறப்பட்டது. இது விடயத்தில் சம்பந்தப்பட்ட பிரதேச சபை நடவடிக்கை எடுத்து பாவனையாளர்களின் சிரமத்தை போக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.(ப-122)

# தென்மராட்சியில் உணவகங்களுக்கு பொருள்கள் விநியோகம்

தென்மராட்சி, ஒக்.16

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் ஆகியவற்றுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. பிரதேசத்தில் இவ்வருடம் இயங்கும் உணவகங்கள் சிற்றுண்டிச்சாலைகளின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளிடம் பிரதேச செயலகத்தினால் கோரப்பட்டுள்ளது. இக் கடைகளை இயக்குவதற்குரிய பொருள்கள் அண்மைக்காலமாக கிடைக்காததால் பல கடைகள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

# கல்வி நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்பு; அடுத்த மாத முற்பகுதியில் நேர்முகத்தேர்வு

கொழும்பு, ஒக்.15

இலங்கை கல்விநிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை அடுத்தமாத முற்பகுதியில் இடம்பெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை கல்விநிர்வாக சேவையில் சுமார் 490 வெற்றிடங்கள் நிலவுவதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா தெரிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் உள்ள இந்த சேவைக்கான வெற்றிடங்களை உடன் நிரப்புமாறு கல்வி அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் -

இந்த நேர்முகப்பரீட்சையில் சித்தியடைபவர்கள் மூலம் வலயக்கல்வி மற்றும் தொகுதி அலுவலகங்களில் உள்ள வெற்றிடங்கள், முன்னணிப் பாடசாலைகளில் உள்ள அதிபர் வெற்றிடங்கள் ஆகியன நிரப்பப்படும் என்றும் - மேலதிக செயலாளர் மேலும் தெரிவித்தார். (203)

# வடமராட்சியில் பாணுக்கு தட்டுப்பாடு

உடுப்பிட்டி, ஒக்.16

வடமராட்சியில் பாணுக்குத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

பாண் தயாரிப்பதற்குப் போதியளவு மா கிடைக்காமையே இத்தட்டுப்பாட்டுக்குக் காரணம் என பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். பேக்கரிகளில் பாணுக்காகப் பெருமளவு மக்கள் வரிசையில் காத்துநிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மாலையில் சிலவேளைகளில் பாண் கிடைப்பதே இல்லையெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (202-155)

# கோப்பாய் மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் வசதி

கோப்பாய், ஒக்.16

கோப்பாய் சுற்றயல்கூறு மருத்துவ மனையின் பயன்பாட்டிற்கென யாழ்.பிரதி மாகாண சுகாதாரப்பணிப்பாளர் அம்புலன்ஸ் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

அத்துடன் தொலைபேசி வசதி, நீர்இறைக்கும் இயந்திரம், ஜெனரேற்றர் என்பனவும் வழங்கப்படவுள்ளன (203-72)


## கண்ணீர் அஞ்சலி



எமது வளலாய் கிராமத்தின் வளர்ச்சி மற்றும் பொதுப் பணிகளில் தனது இளம் பிராயத்திலிருந்து முன்னின்று உழைத்தவரும் எமது நிலையத்தின் நீண்டகாலத் தலைவராக இருந்தவரும் வளலாய் மேற்கு மகளிர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவி திருமதி *சிவயோகம்* ஆசிரியை அவர்களின் அன்புக் கணவரும் இளைப்பாறிய அதிபருமாகிய எமது கிராமத்தவர்

உயர்திரு. *செல்லத்துரை சுந்தரலிங்கம்* அவர்களின் மறைவினால் அவர் குடும்பத்தினர் உற்ற ஆறாத்துயரில் பங்கு கொள்வதுடன் ஆழ்ந்த அனுதாபத்தையும் ஊர் மக்கள் சார்பாக தெரிவித்து அவர் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

வளலாய்,
அச்சுவேலி.

வளலாய் பாரதி சனசமூக நிலையம்.

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20 07 1947

மறைவு
06 10 1987

அமரர்

**கந்தசாமி சண்முகநாதன் (பேபி)**

(முன்னாள் பாலா ஸ்போட்ஸ் கிளப் உரிமையாளர்)

''ஆண்டுகள் பத்தொன்பது சென்றாலும் உங்கள் அன்புமுகம் எமைவிட்டு நீங்காது நாங்கள் பூமியில் வாழும் காலம் வரை எமைவிட்டகலாது உங்கள் முகம்''

இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு.

உங்கள் பிரிவால் துயருறும்:
(54406) ரஞ்சன் குடும்பம்.

## நாய்கள் / கூடுகள் விற்பனைக்கு

Doberman pincher *(டோபர்மான் பின்சர்)* ஆண்/பெண் நாய்கள் பெரிய, சிறிய நாய்க் கூடுகள், சிறிய டைகர் ஜெனரேட்டர் (950) உடன் விற்பனைக்கு.

தொடர்பு :
ஷென் மென் அக்குபன்சர் வைத்தியசாலை,
பிள்ளையார் வீதி, தபால்பெட்டி சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி.

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் [illegible] ஆகிய நிறுவனங்களுக்கு மிக அண்மையில் நவீன வசதிகளுடன் 1800 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ளவும் : 222 5452

## மணமகள் தேவை

யாழ்.கௌரவ கத்தோலிக்க சமயத்தைச் சேரந்த 27 வயதுடைய லண்டனில் கடந்த 8 வருடங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் நற்பழக்கமுடைய மகனுக்கு ஐரோப்பிய நாடுகளில் பிரஜா உரிமையுடைய மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். விளம்பர இல 2929, [illegible]

## சேவை நலன் பாராட்டு

*திரு தம்பையா கணபதிப்பிள்ளை*

**(யா/மீசாலை வீரசிங்கம் ம.வி)**



*எமது பாடசாலையில் கல்வி சாரா ஊழியராகக் கடமையாற்றி இன்று (16.10.2006) தனது 60 ஆவது வயதில் ஓய்வுபெறும் **திரு.தம்பையா கணபதிப் பிள்ளை** அவர்கள் தன் ஓய்வு காலத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ வாழ்த்துகின்றோம்.*

*அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.*

(54398)

## கண்ணீர்அஞ்சலி

**தோழி.செல்வி சிவஞானம் கோமேஸ்வரி**
(முன்னாள் எழுதுவினைஞர்- நல்லூர் ப.நோ.கூ.சங்கம்)



தோழி. செல்வி சிவஞானம் கோமேஸ்வரி அவர்கள் 19.10.2006 இல் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தினருக்கு மெது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
கிளை- நல்லூர் பலநோக்குக் கூ.சங்கம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

## பா.அலானா



லண்டனில் வசிக்கும் **பாஸ்கரலிங்கம் - கோகிலா** தம்பதியரின் செல்வப்புதல்வி அலானா தனது ஐந்தாவது பிறந்த நாளை இன்று (16.10.2006) லண்டனில் தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை லண்டனில் வசிக்கும் அன்பு அம்மா, அப்பா, மாமா, அத்தை, சித்தி மற்றும் இலங்கையில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, சித்தி (கொழும்பு), அப்பப்பா, அப்பம்மா மற்றும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தங்கைமார், தம்பிமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்கவென எல்லாம்வல்ல சிட்டிவேரம் அம்மனின் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றார்கள்.

16.10.2006

தகவல்
**அன்பு அம்மப்பா (சின்னராசா),**
கோகிலா தொலைத்தொடர்பகம், கொடிகாமம்.

# வாடகைக்கு

கொழும்பு 12, டாம் வீதி, இல. 361 - 1/1 இல் 1ஆம் மாடி வாடகைக்குக் கொடுக்கப்படும். அலுவலகம்/ ஸ்ரோருக்கு உகந்தது. 2,500 சதுர அடி கொண்ட 3 அறைகள், 3 பாத்றூம், பெரிய ஆபிஸ், 1(Hall), ஸ்ரோர் றூம் என்பன உண்டு. விவரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

**Tele. No:-(011) 2431935,**
**(011) 2473051**
**(011) 2433900**

# வீடு விற்பனைக்கு

கொழும்பு 12, வாழைத் தோட்டம், இல. 49, சாஞ்சி யாறாச்சி வத்தையில் அமைந்துள்ள 12 பேர்ச் வீடு சுற்றிவர மதிலுடன் 2 கார் தரிப்பிடம், 4 படுக்கை அறை, 5 குளியல் அறை, பெரிய Hall கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள தொ.பேசி:

**011 - 2 431935, 011 - 2 473051, 011 - 2 4333900**

## கோழித் தீவனம் பெற்றுத்தருமாறு கோரிக்கை

கோழிவளர்ப்புக்கான கோழித் தீவனம் பெற்றுத்தருமாறு கோரி பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 275 கோழிப் பண்ணையாளர்கள் பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

மாகாண கால்நடை உற்பத்தித்திணைக்களம் கப்பல்மூலம் கோழித் தீவனம் பெற்றுத் தருவதாகக் கூறியிருந்தது.

இதனையடுத்து தமக்கும் தீவனம் பெற்றுத்தருமாறு கோரி அவர்கள் பதிவுகளைமேற்கொண்டுள்ளனர்.(203-173)

## ஊரடங்கு வேளையில் தேங்காய் திருட்டு

தென்மராட்சிப் பிரதேசத்தில் தென்னந் தோட்டங்களில் ஊரடங்கு வேளையில் திருடர்கள் தேங்காய்களை அபகரித்துச் செல்கின்றனர்.

இதனால், தோட்ட உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது சந்தைகளில் தேங்காயின் விலை என்றுமில்லாத அளவு அதிகரித்ததையடுத்து தேங்காய்த் திருட்டு அதிகரித்துள்ளதாகத் தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களின் காணிகளிலும் தேங்காய் திருடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.(203)

## சட்டவிரோதமாக மரங்கள் தறிப்பு

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சட்டவிரோத மரந்தறிக்கும் சம்பவங்கள் நடைபெறுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதிகளில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் மரம் தறிப்பவர்களிடம் மரங்களைத் தறிக்க வேண்டாம் எனக் கூறினாலும் எங்களுக்கு வேறு தொழில்கள் கிடைப்பதில்லை எனக் கடுந்தொனியில் அச்சுறுத்தி மரங்களைத் தறித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. விறகுக்காக இவற்றைத் தறித்து எடுத்துச் செல்கின்றனர்.

அதிகாரிகள் இவ்விடயம் குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர்.(203-111)


# தொழில் சார் கணனி கற்கை நெறிகள்

Diploma மற்றும் Advance Diploma
கணனி கற்கை நெறிகளின் புதிய பிரிவுகள்
ஒவ்வொரு வாரமும் ஆரம்பமாகின்றன.

புதிய அனுமதிகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
மேலதிக விவரங்களுக்கு .....

Free Course Material
100% Practical Approach

**ASIAN COMPUTER SYSTEM**
**CSC COMPUTER EDUCATION**

| | | | |
|---|---|---|---|
| 2G,1st Floor<br>Stanley road<br>Jaffna.<br>T.P: 021-2225677 | 101,2nd Floor<br>Stanley road<br>Jaffna.<br>T.P: 021-2228196 | Kodikamam Road<br>Nelliyady.<br>T.P: 0773122198 | Kandy Road<br>Chavakachcheri<br>T.P: 0773039587 |


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 20 |  | 16 |
| 05 | | 09 |
| 1952 | | 2006 |

## அமரர் சண்முகம் இரத்தினசிங்கம்

*ஆலமரமெனப் பரந்திருந்து*
*அல்லும் பகலுமெம்மை சீராட்டி*
*வாழ்ந்தது இன்றும் கண்ணுக்குள் நிற்க*
*வாடாத ரோஜாவாய் வானுலகு சென்றுவிட்ட*
*தேடிப்பெறமுடியாத பொக்கிஷமே - அப்பா*
*தேயா நினைவுகளைத் தினம் சுமந்து*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்,*

வேலணை மேற்கு,
வேலணை - 7. குடும்பத்தினர்.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

822 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மகரம் **09 34 37 47**

**13-10-2006**

செல்லுபடியாகும் தொடர் இல. 5471476 - 5486928

ஜக்பொட் பரிசு ரூபா.1,757,450/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| . இலக்கம் | 337,867 | 10/- | 3,378,670/- |
| 2 இலக்கங்கள் | 30,966 | 20/- | 619,320/- |
| 1 இல. + லக்கினம் | 30,595 | 30/- | 917,850/- |
| 2 இல. + லக்கினம் | 2,870 | 100/- | 287,000/- |
| 3 இலக்கங்கள் | 813 | 500/- | 406,500/- |
| 3 இல. + லக்கினம் | 84 | 5,000/- | 420,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,757,450/- | 1,757,450/- |
| மொத்தம் | | | 8,186,790/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 403,205 | | 9,210,290/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல.4598222 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 ஒக்டோபர் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5475924-2-15 |
| கண்டி | 5477157-6-78 |
| கேகாலை | 5473684-7-94 |
| காலி | 5484349-1-74 |
| மாத்தறை | 5472734-4-20 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


# FORUT SRI LANKA

*Our vision is to enhance the quality of life of the people by empowering them through their participation.*

FORUT was established in 1982 as a Norwegian and Swedish Agency to conduct development projects in Sri Lanka. As an International NGO within the movement of IOGT International, we are based on the principals of Solidarity, Peace, Temperance and Democracy. Already before 1982, our predecessor Cey-Nor, had been active in the Jaffna peninsula for a long time. FORUT's work is based on a participatory development approach and building capacities of partners and implementing community organizations. We are also conducting a Tsunami relief and rehabilitation programme in cooperation with the Government of Sri Lanka. The latter will go on up to 2008. One of our special knowledge and activities area is alcohol & drugs and we are conducting preventive temperance activities all over Sri Lanka. We are currently developing a new livelihoods platform in cooperation with NTU university of Trondheim, Norway and our collaborative partner Font, in Colombo. Altogether we are nearly 240 staff in 11 districts and with our head office in Colombo.

FORUT JAFFNA now has a vacancy for the post of

**PROJECT COORDINATOR** (for Kayts & Jaffna West) -1 Position

We are looking for an experienced Project Coordinator with energy, ambitions, skills and knowledge to enhance the results and develop our projects, activities and staff in the area. You must be an enthusiastic team leader with the ability to take initiative, monitor work progress, report, plan, and manage staff and finances. Candidates should have several years experience from similar work preferably from an INGO. You can speak and write English and Tamil. Sinhala knowledge is an advantage. Desired educational background is a graduate degree in Sociology, Management or equivalent. Knowledge of project cycle management and participatory methods is needed. Persons combining this with experience from community development work & organizational capacity building are highly encouraged to apply. You have a high computer literacy and a valid mo-bike license. The interested applicant is prepared to spend extended time in the field under sometimes difficult circumstances.

The Project Coordinator will have approx 6-8 staff to work with including support from one project assistant accountant in each of the two field offices. You will liaise with Jaffna regional office programme staff; other PC's and participate in extended management. The post will require travels within the country, mostly to Colombo.

Through our head office resource pool and university linkages, you will be able to develop your own knowledge as well as get support for staff and programme issues relating to our specific areas such as children/youth, gender, micro-finance, alcohol and drugs.

If you think you are the right person for this challenging post, send your CV together with a personal letter explaining your suitability for the position, to: Administrative Officer, FORUT, 139, Temple Road, Jaffna. Females are encouraged to apply. Duration of contract is 1 year with possibility of extension depending on future funding and performance of staff member. Salary is negotiable for the right candidate and standard social benefits apply.

Applications are received up to 23rd of October Only short listed candidates will be called for interview.

**WELCOME WITH YOUR APPLICATION**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# அரசுத் தலைமைக்குத் தெரியாமல் நடந்த படை நடவடிக்கையா இது?

முகமாலை முன் அரங்கில் கடந்த புதனன்று இரண்டு மணி நேரச் சமரில் அரசுப் படைகளுக்கு ஏற்பட்ட பேரிழப்புக் குறித்து ஆங்கில வார இதழ் ஒன்றில் பிரபல இராணுவ விமர்சகர் ஒருவர் வெளியிட்டிருக்கும் தகவல் இலங்கைத் தீவு முழுவதையுமே அதிர்ச்சிக்குள் ஆழ்த்தச் செய்திருக்கிறது.

இராணுவத் தகவல்களை ஊர்ஜிதப்படுத்த பலரும் பெரும்பாலும் இந்த மூத்த இராணுவ விமர்சகரின் தகவல்களில்தான் தங்கியிருப்பது வழமை. அவர் அம்பலப்படுத்தியிருக்கும் உள்வீட்டு விடயங்கள் இலகுவில் புறக்கணித்து ஒதுக்கிவிடத் தக்கவையல்ல. இன்றைய நிலையில் அடி ஆழம் வரை விசாரித்து உண்மை கண்டறியப்படவேண்டிய விவகாரங்கள் அவை.

தாமும் மிகுந்த இடர்பாடுகள், கடும் நெருக்கடிகள் (Severe Constraints) மத்தியிலேயே அத்தகவல்களை வெளியிடுகிறார் என அவரே ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

குறைந்தது நான்கு மேஜர் தர அதிகாரிகள், நான்கு கப்டன் தரஅதிகாரிகள் உட்பட நூற்றியைம்பது படையினர் வரை அந்த இரண்டு மணி நேர யுத்தத்தில் உயிரிழந்திருக்கின்றார்கள். செக்கோஸ்லோவாக்கியத் தயாரிப்பான ரி-55 ரக டாங்கிகள் இரண்டு, சீனத் தயாரிப்பான கவச வாகனங்கள் ஐந்து ஆகியவற்றையும், பெருமளவு ஆயுதத் தளபாடங்களையும் அரச இராணுவம் இழந்திருக்கின்றது. தவிரவும், காயமடைந்தவர்கள் என்ற வகையில் சுமார் ஐந்நூறு துருப்பினர் யுத்த அரங்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கின்றார்கள்.

இத்தகைய மோசமான விளைவுகள் அனைத்தையும் அரச படைத் தரப்பிற்கு ஏற்படுத்திய இந்தச் சமர், இராணுவச் சமவலு நிலையில் புலிகளின் கைகளைப் பலமடைய வைத்திருக்கின்றது என்பதும் உண்மையே.

சம்பூரிலும், மூதூரிலும், மாவிலாறிலும், முகமாலையில் முன்னர் அரசுத்தரப்பு தான் பெற்றதாகக் காட்டிக்கொண்ட இராணுவ வெற்றிகள் அர்த்தமற்றவை என்பதும் இந்தச் சமரின் மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டன.

மேற்படி இடங்களில் இடம்பெற்ற மோதல்களில் ஒன்றுமில்லா விடயங்களைப் பெரு வெற்றியாகக் காட்டித் தனக்குத் தானே கிரீடம் சூட்டிக் கொண்டு மகிழ்ந்தது தென்னிலங்கை. தான் மேற்கொண்ட அந்தப் பரப்புரைகளை - பசப்புரைகளை - தானே நம்பி, வடபோர் முனையில் அகலக்கால் வைத்து, பேரிழப்பைச் சந்தித்து இருக்கிறது அரச படைத் தரப்பு.

முன்னாள் விமானப்படைத் தளபதியும், இப்போதைய விமானப்படைத் தளபதியின் தந்தையாருமான வைஸ் மார்ஷல் ஹரி குணத்திலக கூறுவது போல, ''அரசு தான் மேற்கொண்ட பரப்புரைக்குத் தானே பலியாகி விட்டது'' - என்பதுதான் உண்மை போலும்.

எது, எப்படியென்றாலும் பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் தமக்குள்ள நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் தமது வாராந்தப் பாதுகாப்புக் கள நிலைவரம் பற்றிய ஆய்வில் குறிப்பிட்ட அம்சங்களில் இரண்டு முக்கிய விடயங்கள் இன்றைய நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

* ஒன்று - அரசுப் படைகளே கடந்த புதனன்று முகமாலையில் வலிந்து தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்து, மேற்கொண்டு இழப்புக்களைச் சந்தித்துள்ளன.

* அடுத்தது - பாதுகாப்புத் தலைமைக்கோ, அரசியல் தலைமைக்கோ தெரியாமல் பாதுகாப்பு அதிகாரிகள் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கை இது.

- வலிந்து தாக்குதல் நடவடிக்கை எதையும் அரசுப் படைகள் மேற்கொள்ளவேமாட்டா என்று கடந்த திங்களன்றுதான் இணைத் தலைமை நாடுகளின் கொழும்புத் தூதர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரில் உறுதிமொழி வழங்கியிருந்தார்.

அவரது உறுதிமொழி வழங்கப்பட்டு 48 மணி நேரம் கடப்பதற்கு முன்னரே, அந்த உறுதி மொழியை மீறும் வகையில் அரசுப் படைகள் தம்பாட்டில் ஒரு வலிந்த தாக்குதலைப் பெரும் எடுப்பில் நடத்தியிருப்பதை இக்பால் அத்தாஸின் கட்டுரையும், ஏனைய தகவல்களும் திட்டவட்டமாக உறுதிப்படுத்துகின்றன.

இக்பால் அத்தாஸ் குறிப்பிடுவதுபோல, அரசுத் தலைமைக்கோ அல்லது அரசியல் தலைமைக்கோ அல்லது பாதுகாப்புத் தலைமைக்கோ தெரியாமல், அதிகார மட்டத்தில் இந்த வலிந்த தாக்குதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதா என்பது தமிழர் தரப்பைப் பொறுத்தவரை சந்தேகத்துக்குரியதே.

இந்தப் படை நடவடிக்கைக்கு விமானப்படைக் குண்டு வீச்சு விமானங்கள் உதவியிருக்கின்றன. நாகர்கோவில் பக்கத்தில் கடலிலிருந்து கடற்படைப் படகுகள் பீரங்கித் தாக்குதல் நடத்தி, இப்படை நடவடிக்கைக்கு ஒத்தாசை புரிந்திருக்கின்றன.

பாதுகாப்பு மேல் மட்டத்தில் உரிய வழிகாட்டுதல், பங்களிப்பு இல்லாமல் இவ்வாறு இராணுவ நடவடிக்கைக்கு கடற்படை மற்றும் விமானப்படை ஒத்துழைப்பை எவ்வாறு கூட்டிணைத்திருக்க முடியும் என்ற நியாயமான கேள்வி பிறப்பது தவிர்க்க முடியாதது.

மாவிலாறிலும், சம்பூரிலும், மூதூரிலும், முன்னர் முகமாலையிலும் இராணுவ வெற்றிகளைத் தாம் சாதித்துக் கொண்டதாகத் தென்னிலங்கை தனக்குத் தானே மகுடம் சூட்டிக் கொண்டபோது, அந்தப் பெருமை எல்லாம் அரசுத் தலைமைக்கே - குறிப்பாக ஜனாதி பதி மஹிந்தவுக்கே - அணிவிக்கப்பட்டது.

ஆனால், இப்போது முகமாலை முன் அரங்கில் புலிகளிடம் வாங்கிக்கட்டும்போது அதற்கான பொறுப்பை இராணுவ அதிகார மட்டத்திடம் சுமத்திவிட்டு அரசியல் தலைமை தான் கெட்ட பெயர் சம்பாதிக்காமல் ஒதுங்கிக் கொள்ள முயல்கின்றதோ என்ற வலுவான சந்தேகம் இக்பால் அத்தாஸின் பாதுகாப்பு நிலைவரம் பற்றிய கட்டுரையை வாசிப்பவர்களுக்கு ஏற்படாமல் இல்லை.

''பெருமைக்குத் தலைமை; சிறுமைக்குத் தளபதி'' - என்ற மாதிரி நாடகம் ஆட முயல்கிறதா தென்னிலங்கை?

இக்பால் அத்தாஸ் குறிப்பிடுவது போல உண்மையில் அரசியல் தலைமைக்குத் தெரியாமல், பாதுகாப்புப் பகுதியில் ஒரு பிரிவு தன்பாட்டில் இத்தகைய வலிந்த தாக்குதல் நடவடிக்கையை முன்னெடுத்திருக்குமானால் -

அதுவும், வலிந்த தாக்குதல் நடவடிக்கை எதையும் தமது அரசுப் படைகள் எடுக்கமாட்டா என நாட்டின் தலைவர், அமெரிக்கா உட்பட இணைத் தலைமை நாடுகளுக்கு நேரில் உறுதிமொழி வழங்கியிருக்க - 48 மணி நேரத்துக்குள் - அத்தகைய உறுதிமொழியைக் காற்றில் பறக்க விடும் வகையில் அரசுத் தலைமையை மீறி இராணுவத் தரப்பு இத்தகைய பெரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருக்குமானால் -

அது, மிகப் பெரிய ஆபத்தான விவகாரம்.

பாகிஸ்தான், பர்மா, தாய்லாந்து போன்ற மோசமான நிலைமை இலங்கைத் தீவிலும் ஏற்படலாம் என்பதற்குக் கட்டியம் கூறும் போக்கு இது.

அரசுத் தலைமை எச்சரிக்கை அடைவது நல்லது.

# சீரான போக்குவரத்து ஏற்படும்வரை கடமைக்குச் சமுகமளிக்க முடியாது

## வெளிமாவட்ட கல்விசார் அலுவலர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.16

சீரான போக்குவரத்து ஏற்பாடு ஒழுங்கு செய்து தரப்படும் வரைக்கும் கடமைக்குச் சமுகமளிக்கமுடியாது என்று யாழ்ப்பாணத்திலிருந்து சென்று கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விசார் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமது நிலைப்பாட்டினை விளக்கி வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைக்கவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

மேற்படி ஆசிரியர் மற்றும் கல்விசார் அலுவலர்கள் சுமார் 500 பேர் நேற்றுக்காலை யாழ். கல்வி வலயத்தில் ஒன்று கூடி இது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

சீரான போக்குவரத்துகள் இடம் பெறாதவரை நாங்கள் போக்குவரத்துச் செய்யக்கூடியதாக இல்லை.

தென்மராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த கல்விசார் அலுவலர்கள் தற்போதைய நிலையில் தமது குடும்பத்தினரை விட்டு விலகிச் செல்லமுடியாத நிலையுள்ளது.

எனவே, போக்குவரத்துச் சூழல்கள் சீராக இடம்பெறும் வரைக்கும் தொடர்ந்தும் யாழ்.நகரில் வரவுகளைப் பதிவு செய்ய ஆளுநர் அனுமதிக்கவேண்டும் என்று யாழ். கல்வி வலயத்தில் நேற்றுக் கூடிய கல்விசார் அலுவலர்கள் தெரிவித்தனர்.

கடந்த 11.09.2006 திகதியிட்டு சகல வடக்கு - கிழக்கு மாகாணங்களின் செயலாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள எம்.ஈ.பி./சீசீ/பி/03 எல் 35 ஐ இலக்கம் கொண்ட கடிதத்திற்கு அமைய போக்குவரத்துச் சீரடையும் வரை தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் எமது கையொப்பங்களைப் பதிவுசெய்ய அனுமதிக்குமாறு கோரியுள்ளோம்.

தற்போது தயாரிக்கவுள்ள மகஜர்களை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், மாகாண தலைமைச் செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கவுள்ளோம்.

எனவே போக்குவரத்துப் பிரச்சினைக்கு முகம்கொடுத்துள்ள அனைத்து வெளி மாவட்ட ஆசிரியர்களும் ஊழியர்களும் குறிப்பிட்ட மகஜரில் கையொப்பமிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெளிமாவட்டங்களுக்கென புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களது விவரங்களும் திரட்டப்படவுள்ளன. அவர்களது நிலை தொடர்பாகவும் கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்படும்.

புதிய ஆங்கில ஆசிரியர் நியமனம் பெற்ற இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் தமது பெயர் விவரங்களைச் சமர்ப்பிப்பதுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது சொந்த விலாசங்களையும் அறிவிக்கவேண்டும் என்று யாழ். கல்வி வலயத்தில் கூடிய கல்வி அலுவலர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (111-88)

# பொன்னாலை பரவைக் கடலில் தொழில் செய்ய அனுமதி பெற்றுத்தருமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.16

பொன்னாலை மேற்கு பிரதேச கடற்றொழிலாளர்கள் பரவைக் கடற் பகுதியில் தொழில்செய்வதற்கு உரிய தரப்பினரிடமிருந்து அனுமதியைப் பெற்றுத் தருமாறு ஸ்ரீ கண்ணன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி பிரதேச கடற்றொழிலாளர்கள் தொழில்செய்வதற்கு கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதி தொடக்கம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களாக முகாம்களிலும் வீடுகளிலும் வாழ்கின்ற இவர்கள் எந்தத் தொழிலும் இல்லாமல் வறுமையில் வாடுவதாகவும் - தற்போதைய பொருளாதாரத் தடைகளின் மத்தியில் பட்டினிச்சாவை மக்கள் எதிர்நோக்குவதாகவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மக்களைப் பாதுகாப்பதற்காகத் தொழில் அனுமதியைப் பெற்றுத் தருமாறும் - நஷ்டஈடுகளைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறும் சங்கம் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (202)

# உணவு விநியோகம் குறித்த அறிவுறுத்தலை உதாசீனம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.16

உணவுப் பொருள் விநியோகம் தொடர்பாக வழங்கப்படும் அறிவுறுத்தலை உதாசீனம் செய்யும் கூட்டுறவுக் கிளை முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ்.

குடாநாட்டிலுள்ள ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக இடம்பெற்றுவரும் நிவாரண விநியோகம் மற்றும் அது தொடர்பாக கிடைத்த முறைப்பாடு, ஊழல்கள் சம்பந்தமாக ஆராயும் கூட்டம் ஒன்று நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டம் தொடர்பாக 'உதயனு'க்கு கருத்துத் தெரிவித்த அரச அதிபர் -

தற்போதைய நெருக்கடியான சூழலில் பொதுமக்கள் சொல்லொனாத் துயரத்தை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையில் ப.நோ.கூ.சங்கக் கிளை முகாமையாளர்கள் ஊழலற்ற, நேர்மையான - பொறுப்பான சேவையைப் பொதுமக்களுக்கு வழங்கவேண்டும்.

மேற்படி அறிவுறுத்தலை உதாசீனம் செய்து முறையற்ற விதத்தில் செயற்படும் முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி, திட்டப் பணிப்பாளர் ப.கேதீஸ்வரன் மற்றும் உதவித் திட்டப் பணிப்பாளர், யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் சகல அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (79)

# அரச ஊழியருக்கு இன்று பெற்றோல்

யாழ்ப்பாணம்,ஒக்.16

பிரதேச செயலகங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்ட எரிபொருள் பங்கீட்டு அட்டைக்கு இதுவரை பெற்றோல் பெறாத அரச அலுவலர்களுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் இன்று பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நேற்றைய தினம் பெற்றோல் விநியோகிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 300 ரூபாவிற்கு இன்று பெற்றோல் பெறலாம் என்றும் -

பெற்றோல் பெறும்போது ஒவ்வோர் அலுவலரும் தத்தமது உத்தியோகபூர்வ அடையாள அட்டையை சமர்ப்பிப்பது இன்றியமையாதது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (79)

# பால்மா எங்கே? யாரிடம் முறையிடுவது?

அண்மையில் கப்பல் மூலம் யாழ். குடாநாட்டிற்கு 1,64,128 பைக்கற் பால்மா எடுத்துவரப்பட்டுள்ளது.

இவற்றுள்

**அங்கர் - 2,988 பைக்கற்**
**நெஸ்பிறே - 24,984 பைக்கற்**
**டயமண்ட் - 24,816 பைக்கற்**
**டயமண்ட் (ஒரு கிலோ) - 3,940 பைக்கற்**
**நெஸ்டோமோல்ட் - 12,456 பைக்கற்**
**ஹைலன்ட் - 86,400 பைக்கற்**

என்பன அடங்குகின்றன.

இவற்றைவிட குழந்தைகள் பால்மாவும் 30,000 பைக்கற் எடுத்துவரப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், நீர்வேலி ப.நோ.கூ. சங்கங்கள் ஏற்கனவே பால்மா விநியோகம் செய்துவிட்டன. யாழ்ப்பாணத்தில் மொத்தம் 1,74,000 குடும்பங்கள்தற்போது வசித்து வருகின்றன.

**உங்கள் பிரச்சினையில் உதயன் பளிச்**

எடுத்துவரப்பட்ட பால்மா விநியோகிக்கப் போதாதுதான். ஆனால், நல்லூர் ப.நோ.கூ. சங்கத்திலிருந்து பால்மா மறைந்தது எப்படி என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

கடந்த 08.10.2006 அன்று நல்லூர் ப.நோ.கூ. சங்க கிளைகளுக்கு பால்மா தவிர்ந்த ஏனைய உலர் உணவுப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டன. பால்மா எப்போது அனுப்புவீர்கள் என சங்க அலுவலகத்தில் கேட்டபோது, நாளை 09.10.2006 முதல் பெற்றுக்கொள்ளலாம் என்றார்கள்.

மறுநாள் கிளைகளுக்கு பால்மா வரவில்லை. சங்க அலுவலகத்தில் போய்க்கேட்டபோது, அனுப்பிவிட்டோம் நீங்கள் கிளைக்குப் போங்கள் எடுக்கலாம் என்றார் அங்கிருந்த உத்தியோகத்தர். ஆனால், பால்மா வரவில்லை.

மூன்றாவது தடவையாக 10.10.2006 அன்று பொது [illegible] கிளை [illegible] க்கு - நாளை அனுப்புவோம். அப்படியில்லாவிட்டால் நீங்கள் இங்கே வாருங்கள் நான் தருகிறேன் - என்றார் பொது முகாமையாளர்.

பொது முகாமையாளர் கூறியபடி பால்மா வரவில்லை. 13.10.2006 அன்று பால்மா வந்து சேர்ந்தது. கிளை முகாமையாளரிடம் போய் பால்மா தருவீர்களா என்று கேட்டதற்கு, பால்மா வந்து விட்டது; இன்னும் விலை வரவில்லை என்றார் கிளை முகாமையாளர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் அரச அதிபரால் வழங்கப்பட்ட விலைப்பட்டியலின் பிரதி என்னிடம் இருந்தது. இதுதான் விலை என நான் கிளை முகாமையாளருக்கு கூறினால், அவர் பெற்றுக்கொள்வாரோ தெரியாது என்ற சந்தேகத்தில், நாளை வருவதாகக் கூறிச் சென்றுவிட்டேன்.

மறுநாள் காலை 11.30 மணிக்குச் சென்று கிளை முகாமையாளரிடம் பங்கீட்டு அட்டையை நீட்டினேன். கிளை முகாமையாளர் பால்மா முடிந்துவிட்டது லக்டோஜன் மட்டுமே உள்ளது வேண்டுமானால் தரலாம் என்றார்.

நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் கீழ் உள்ள மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 12,684. நல்லூர் ப.நோ.கூ. சங்கத்திற்கு மொத்தம் 13,056 பைக்கற் பால்மா யாழ். செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது, நெஸ்டோமோல்ட் உட்பட.

நல்லூர் ப.நோ.கூ. சங்கத்திற்கு வழங்கப்பட்ட பால்மா விவரம் வருமாறு:-

அங்கர் - 180 பைக்கற், நெஸ்பிறே - 1,752 பைக்கற், நெஸ்டோமோல்ட் - 1,188 பைக்கற், டயமண்ட் - 4,018 பைக்கற் (ஒருகிலோ பைக்கற் உட்பட), ஹைலன்ட் - 5,918 பைக்கற்.

12,684 குடும்பங்களுக்கு 13,056 பைக்கற் பால்மா வழங்கப்பட்டுள்ளது. சங்கக்கடையில் பால்மா இல்லை என்கிறார்கள். இதை யாரிடம் முறையிடுவது? எவரிடம் சொல்லி அழுவது?

**திருநெல்வேலி.** - **ந.பரமேஸ்வரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதாபிமானத் திட்டங்களின் கீழான

# ஆஸி. விஸா விண்ணப்பங்கள் பெறுவதற்கு வடக்கு - கிழக்கு மக்களுக்கு உதவுங்கள்!

## ஐ.நா. அகதிகள் அமைப்பிடம் அங்குள்ள தமிழ் கலாசாரக் கழகம் வேண்டுகோள்



சேனட்டர் அமண்டா வன்ஸ்டோன்
(ஆஸி.குடிவரவு அமைச்சர்)



விக்கிரமசிங்கம்
([illegible])

கொழும்பு,ஒக்.16

வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக ஆஸ்திரேலிய அரசினால் வழங்கப்படும் மனிதாபிமான 'விஸா' திட்டத்திற்கு வடக்கு - கிழக்கு மக்கள் விண்ணப்பிக்கும் வகையில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும் என ஆஸ்திரேலிய தமிழ்க் கலாசாரக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இக்கழகம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்திற்கு வழங்கியுள்ள மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக ஆஸ்திரேலிய அரசு மனிதாபிமான விசேட 'விஸா' திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த விஸாவுக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெறக்கூடிய நிலையில்வடக்கு - கிழக்கு மக்கள் இல்லை. வடக்கிற்கான பாதைகள் அரசபடையினரால் மூடப்பட்டு, தபால் போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, இந்த விண்ணப்பங்களை வடக்கே கொண்டு போய் வழங்குவதற்கான உரிய நடவடிக்கைகளை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் எடுக்க வேண்டும். - என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய தமிழ் கலாசாரக் கழகத்தின் செயலாளர் நா.இ. விக்கிரமசிங்கம், கடந்த வெள்ளியன்று அவுஸ்திரேலிய மத்திய நாடாளுமன்ற உறுப்பினர் அந்தனி பேர்ன், வெளிவிவகார நிழல் அமைச்சர் கெவின் ரட் ஆகியோர் ஊடாகக் கடந்த வெள்ளிக்கிழமை இந்த வேண்டுகோள் அறிக்கையை வழங்கினார்.

மேற்படிப் பிரதிநிதிகள், விண்ணப்பதாரர்களை நேரில் சென்று பார்வையிட்டு, அவர்களுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

இது தொடர்பாக விக்கிரமசிங்கம் தெரிவிப்பதாவது:-

''பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குத் தமிழ் அகதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் விஸா வழங்கும் திட்டத்தை ஆஸ்திரேலிய அரசு ஆரம்பிக்க வேண்டும் என ஆஸ்திரேலியத் தமிழ்க் கலாசாரக் கழகம் சில வருடங்களாகக் கோரிக்கை விட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்டுள்ள அகதிகள், விஸாவுக்கு விண்ணப்பிப்பதற்கு தங்களது ஆஸ்திரேலிய உறவுகளின் அனுசரணை விண்ணப்பத்தையும், ஆவணங்களையும் பெற முடியாமல் உள்ளனர்.

ஆஸ்திரேலியக் குடியுரிமை உடையவர்கள் அல்லது நிரந்தர வதிவுரிமை உடையவர்கள் பாதிப்புற்ற தமது உறவினர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அனுசரணை வழங்கி அவர்களது விஸா விண்ணப்பங்களுக்கு உதவ முடியும். மனிதாபிமான அடிப்படை விஸாக்களான IN COUNTRY SPECIAL - HUMANITARIAN VISA, SUB CLASS 201 என்ற குறியீட்டு விஸா அல்லது EMERGEN CY RESCUE, SUB CLASS 203 என்ற குறியீட்டு விஸா போன்றவற்றிற்கான விண்ணப்பங்களுக்கு அவர்கள் உதவலாம்.

விண்ணப்பிப்பவர் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தில் பதிவு செய்திருப்பின் அதற்கான ஆவணம் அல்லது கிராமசேவை உத்தியோகத்தர், உதவி அரச அதிபர் ஆகியோரிடமிருந்தும், செஞ்சிலுவைச் சங்கம், அரச சார்பற்ற நிறுவனம் மற்றும் சமூக அமைப்புகள் போன்றவற்றிடமிருந்தும் பெறப்பட்ட சிபார்சுக் கடிதங்கள் போன்றவற்றை வைத்திருந்தால் அவை உதவியாக அமையும்.

அவுஸ்திரேலியாவில் உள்ள உறவுகள் பூர்த்தி செய்ய வேண்டிய விண்ணப்பப் படிவம் SPECIAL HUMANITARIAN (PROPOSOL 68 FORM) ஆகும்.

பாதிப்புற்ற தமிழ் அகதிகள் பூர்த்தி செய்ய வேண்டிய விண்ணப்பப் படிவம் FORM 842 OFF SHORE HMANITARIAN VISA ஆகும்.

மேலதிக விவரங்களை nsw.offshore. humanitarian @ immi.gov.au என்ற இணையத்தளம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

கொழும்பில் முகவர்களை நம்பி ஏமாறுவதைத் தவிர்த்துக் கொள்வதற்காகக் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்வது நல்லது. (உ)

## முக்கிய அரசியல் முடிவுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இரு விவகாரங்களும் இலங்கை அரசியல் போக்கில் பெரும் தாக்கங்களை உருவாக்கக் கூடிய மாற்றங்களை ஏற்படுத்த வல்லன என்று கருதப்படுவதால் இன்றைய முடிவுகள் அரசியல் வானில் பரபரப்புடன் எதிர்பார்க்கப்படுகின்றன.

சுமார் 17 ஆண்டுகளாகத் தமிழர் தாயகமான வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் நிர்வாக ரீதியாக ஒன்றிணைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

அவற்றைப் பிரிக்குமாறு உத்தர விடக் கோரி ஜே.வி.பியின் இரண்டு கிழக்கு மாகாண எம்.பிக்கள் உட்பட மூவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்ட நிலையில் இன்று தீர்ப்பு வழங்கப்படுகின்றது.

இந்த மனுக்கள் மீதான விசாரணைகளில் தங்களை இடையீட்டு மனுதாரர்களாகச் சேர்க்கக் கோரி தமிழர் அமைப்புகளால் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், இத்தீர்ப்பு இன்று வருகின்றது.

வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனாவால் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் பின்னர், அவராலும் அவருக்குப் பின்னர் அப்பதவிக்கு வந்த ஜனாதிபதிகள் ஆர். பிரேமதாஸ, டி.பி. விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய அனைவராலும் அரசியல் ரீதியாக முடிவெடுக்கப்பட்டு, அந்த முடிவுகளின் அடிப்படையில் இணைப்புக்கான பிரகடனம் வருடா வருடம் நீடிக்கப்பட்டு வருகின்றது.

அந்த அரசியல் முடிவில் நீதித்துறை தலையிடுமா, பிரிப்புக்கு உத்தரவிடுமா, இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்புக்குக் கால வரம்பு விதிக்குமா என்பவையெல்லாம் இன்றைய தீர்ப்பில் தெரியவரும்.

வடக்கு - கிழக்கு பிரிப்புக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு, அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்க தென்னிலங்கை அரசு முயலுமானால் தற்போதைய அமைதி முயற்சிகள் என்ற அரசியல் நடவடிக்கையில் பெரும் இக்கட்டும், பாதிப்பும், பின்னடைவும், மீளச் சீர்செய்ய முடியாத விளைவுகளும் ஏற்படும் என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதேவேளை -

சுதந்திரக் கட்சியுடன் பொது இணக்கப்பாட்டு அடிப்படையில் ஒன்றுபட்டுச் செயற்படுவதா என்பது குறித்து ஐ.தே. கட்சியின் செயற் குழுவும், நாடாளுமன்றக் குழுவும் இன்று தனித்தனியாகக் கூடி ஆராய்ந்து முடிவெடுக்க இருக்கின்றன.

இந்த முடிவும், தென்னிலங்கை அரசியல் போக்கில் பாரிய மாற்றங்களையும், திருப்பங்களையும் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்கால அமைதி முயற்சிகளிலும் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய விவகாரம் இது என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேவேளை -

நேற்று இலங்கைக்கு வருகை தந்த ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி, இவ்வாரம் இங்கு வரவிருக்கும் நோர்வேயின் அனுசரணைப் பணிக்கான விசேட தூதுவர் ஜான் ஹன்ஸன் போவர், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிச் செயலாளர் ரிச்சர்ட் பௌச்சர் ஆகியோரின் விஜயங்களும் இலங்கையின் அரசியல் கள நிலைவரங்களில் பல்வேறு மாற்றங்களையும், திருப்பங்களையும் ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (உ)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பில் மேஜர் குயில்கண்ணன் (அம்பாறை மாவட்டம்), கப்டன் தாதங்கன் என அழைக்கப்படும் கோவிந்தன் பொன்னுத்துரை (மட்டக்களப்பு மாவட்டம்) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர் என்றும் புலிகள் தெரிவித்தனர். (த)

## கற்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு திட்டமிட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. - என்றார்.

இது குறித்து இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க கூறியதாவது:-

மன்னார் அரிப்புப் பகுதியிலிருந்து 35 கடல்மைல் தொலைவில் இரு படகுகள் வருவதைக் கடற்படையினர் அவதானித்துள்ளனர். அவற்றில் ஒரு படகு கற்பிட்டிப் பகுதியிலிருந்து சென்ற மீனவர்களுடையது எனத் தெரிந்துகொண்டனர். மற்றைய படகு சற்றுப் பெரிதாக இருந்தது. அதில் இலங்கையின் தேசியகொடி பறந்துகொண்டிருந்தது. இது சந்தேகத்தை ஏற்படுத்தவே அந்தப் படகின் அருகே சுமார் 100 மீற்றர் தூரம் சென்று படகை நிறுத்தும்படி கடற்படையினர் கூறினர்.

உடனே, அப்படகிலிருந்தோர் கடற்படையினரின் டோரா படகுமீது தாக்குதலை நடத்தினர். கடற்படையினர் திரும்பத் தாக்கினர். படகில் பெரிய வெடிப்பு ஏற்பட்டது. இதிலிருந்து அந்தப் படகில் வெடி மருந்துகள் கொண்டுசெல்லப்பட்டுள்ளது என்பது உறுதியாகியுள்ளது. அந்தப் படகில் 6 விடுதலைப் புலிகள் இருந்ததை கடற்படையினர் பார்த்துள்ளனர். வெடிப்பையடுத்து படகு மூழ்கியது.

## பேச்சுகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''ராஜபக்ஷ ஆட்சியின் இந்த 'யுத்த மும் சமாதானமும்' என்ற தந்திரப் போக்கால் தமிழ் மக்கள் பெரிதும் ஏமாற்ற மடைந்துள்ளனர்.

''பேச்சுக்கான உகந்த சூழ்நிலையை உருவாக்க முன்னர், இருதரப்பையும் பேச்சு மேசைக்கு இழுத்து வருவதற்கு நோர்வே அனுசரணைத் தரப்பினர் பாடாத பாடுபட்டாலும் உத்தேச சுவிஸ் பேச்சு நடைபெறுமா என்பது களத்தில் இடம் பெறும் நிகழ்வுகளை பொறுத்தே உள்ளது.

''பயணங்களையும் பிற அலைச்சல்களையும் தவிர்த்து வீட்டில் தங்கியிருந்து ஓய்வெடுக்கும்படி எனக்கு வைத்திய ஆலோசனை தரப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் சுவிஸில் நடக்கும் பேச்சுகளில் நான் பங்குபற்றக்கூடியதாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

''எனது உடல்நிலை காரணமாக இம்முறை லண்டனில் நடைபெறும் மாவீரர் தினக் கூட்டத்திலும் நான் உரையாற்றக் கூடியதாக இருக்கமாட்டாது என நினைக்கின்றேன்''. - என்று தெரிவித்தார் பாலசிங்கம். (உ)

## படுகொலை...

கோப்பாய் - கிறிஸ்தவக் கல்லூரியில் காவலாளியாக்கடமை புரிந்தவர் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின்போது, சபாரத்தினம் அருள்ரத்தினம் (வயது-30) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, விசாரணைகளின் பின்னர் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (த-70-118-203)

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை 'ஜால்' என்ற சரக்குக் கப்பல் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படவுள்ளது. - என்று யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். (79)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதல்களில் படையினர் தரப்பில் இருவர் உயிரிழந்ததுடன் 13 பேர் படுகாயமடைந்தனர் என்று தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

எனினும் இழப்புகள் தொடர்பான புலிகள் தரப்புத் தகவல்கள் நேற்றுஇரவு வரை கிடைக்கவில்லை.

இதேவேளை நேற்றிரவும் வழமை போல் ஷெல் மற்றும் ஆட்லறி தாக்குதல் களின் அதிர்வை யாழ்.நகரப பகுதியில் கேட்கக் கூடியதாக இருந்தது. எனினும் இவற்றினால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தெரியவர வில்லை.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என தாங்கள் கருதுகின்றனர்என்றும்இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த படகில் புலிகள் எரிபொருள்கள் அல்லது வெடிபொருள்கள் ஏற்றி வந்திருக்கலாம் என்றும் கடற்படையினர் சந்தேகம் தெரிவித்தனர். (த-04)

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழப்பு

ஊர்காவற்றுறை நகரப் பகுதியிலுள்ள பேக்கரியில் நேற்றுமுன்தினம் இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர்காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் நெடுங்காடு, காரைநகரைச் சேர்ந்த இராமு செல்லத்துரை (வயது -45), கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த தவராசா குணதீபன் (வயது -23) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

காயமடைந்த இரு இளைஞர்கள் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

சம்பவ இடத்திற்கு நேற்றுச் சென்ற ஊர்காவற்றுறைப் பதில் நீதிவான் இ.த. விக்னராஜா, விசாரணைகளின் பின்னர் கொல்லப்பட்ட இருவரது சடலங்களையும் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கும்படி உத்தரவிட் டார். (78-202-203)

## வெளிமாவட்ட ஆசிரியர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், ஒக்16

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள மகஜரில் கையொப்பமிடுவதற்காக, வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களையும், கல்விசார் அலுவலர்களையும், ஆசிரியர் பயிற்சிக்குச் செல்லவுள்ள மற்றும் வெளிமாவட்ட ஆங்கில ஆசிரியர்களையும் இன்று காலை 10 மணிக்கு யாழ்.கல்வி வலயத்துக்கு அருகில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை தாமோதரம்பிள்ளை

மந்துவில் வடக்கு குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தாமோதரம்பிள்ளை நேற்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் அப்பாத்துரை-பாக்கியம் தம்பதியரின் மருமகனும் இரத்தினத்தின் பாசமிகு கணவரும் கணேச பாலேந்திரன் (அதிபர், யா/கைதடி குருசாமி வித்தியாலயம்), தவராசா (மக்கள் வங்கி, சாவகச்சேரி), தருமராசா (லண்டன் ), கலையுணர்பவன் (கனடா), ராஜகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2006) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு மந்துவில் ஞானிகாடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தா.கணேசபாலேந்திரன்** (மகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org